உ Aum

சிவமயம் Sivamayam



Prarthanai Malar

பிரார்த்தனை மலர்

பீற்றர் சொங் அச்சகம், மலாக்கா

UNIVERSAL PRAYER

O Adorable Lord of Mercy and Love!
Salutations and prostrations unto Thee
Thou art Omnipresent, Omnipotent, Omniscient;
Thou art Satchidananda (Existence, Knowledge, Bliss)
Thou art the Indweller of all beings.
Grant us un understanding heart,
Equal vision, balanced mind,
Faith, devotion and wisdom.
Grant us inner spiritual strength
To resist temptations and to control the mind.
Free us from egoism, lust, greed, anger and hatred.
Fill our hearts with divine virtues.
Let us behold Thee in all these names and forms.
Let us serve Thee in all these names and forms.
Let us ever remember Thee.
Let us ever sing Thy glories.
Let Thy name be ever on our lips.
Let us abide in Thee for ever and ever.

— *Swami Sivananda.*

சமரசப் பிரார்த்தனை

ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

கருணையும் அன்பும் நிறைந்த இறைவா! எல்லா உயிர்களிலும் ஊடுருவி எங்கும் நிறைந்து சர்வ வல்லமையும் பொருந்திய சர்வக்ஞான சச்சிதானந்தப் பரம்பொருளாம் உம்மை வணங்கி பணிகின்றோம். மெய்ப்பொருள் காணும் உள்ளம், சமநோக்கு, நிலைபெற்ற மனம், சிரத்தை, பக்தி, ஞானம் இவைகளை எங்களுக்கு அருள்வீராக. ஆணவம், காமம், பேராசை, கோபம், வெறுப்பு, இவைகளிலிருந்து எங்களை விடுவித்து எங்கள் உள்ளங்களில் தூய தெய்வீகக் குணங்களை நிரப்புவீராக. எல்லா உருவங்களிலும் பெயர்களிலும் உம்மையே தரிசித்து சேவை செய்வோமாக. எந்நேரமும் உம்மையே சிந்திப்போமாக. என்றென்றும் உமது புகழைப் பாடுவோமாக. எப்போதும் எங்களது நாவினில் உமது திருநாமம் விளங்குக. என்றும் உம்முள்ளே நிலைபெற்று விளங்குவோமாக. ஓம் தத்சத்.

2-5

உ சிவமயம். Aum Sivamayam

சமர்ப்பணம் To the memory of



தோற்றம்
Born
7-8-1915

சிவபதம்
Departed
8-12-1976

திரு. குணம் அருள்பிரகாசம் நவரத்தினம்
Thiru Goonam Arulpragasm Navaratnam

இங்ஙனம், from

திருமதி மு. நவரத்தினம்
Thirumathi M. Navaratnam

பொ. நவரத்தினம் - ந. கமலமலர்
P. Navaratnam - N. Kamalamalar

ந. தேவேந்திரன் - கா. பரிமளாதேவி
N. Devendran - K. Parimala Devi

க. அம்பிகாபதி - ந. சாந்தமலர்
K. Ambikapathy - N. Santhamalar

இப் "பிரார்த்தனை மலர்" மலேசிய தெய்வீக வாழ்க்கைச் சங்கத் தலைவரும், எங்கள் குருவுமாகிய தவத்திரு சுவாமி பிரணவானந்த சரஸ்வதி மகாராஜ் அவர்களின் நல்லாசிகளுடன் 7-1-77ல் கோலாலம்பூர், எண் R 15 ஸ்தாபாக் கார்டன் இல்லத்தில் நடைபெற்ற விசேஷ பிரார்த்தனைக் கூட்டத்தில் வெளியிடப்பெற்றது.

This "Prarthanai Malar" is released with the Blessings and Grace of our Guru His Holiness Swami Pranavananda Saraswathy Maharaj. President, Divine Life Society, Malaysia at a special prayer meeting held on 7-1-77 at R 15, Setapak Garden, Kuala Lumpur.

"சைவ சித்தாந்தம்" - தமிழரின் தத்துவம்.
"Saiva Sidthanta" - Philosophy of the Tamils.

மெய்கண்டார் அருளிய

சிவஞான போதம்

Siva Gnana Botham of Meikandar

மங்கள வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

The devotees will crown their heads with the twin feet of Pillaiyar who has been graciously given to us by Siva who is free from doubt and is sitting under the stone - banyan tree.

1. அவன் அவள் அது வெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்(து) உளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

The Sages say the world which is perceived as he' 'she' and 'it' is subject to the cyclical process of evolution, existence in form and involution. The Agent of involution is likewise the Agent of evolution, because the world must evolve by the power of the One who caused it to disappear. The world evolves in order that the anava of souls may be worn away.

2. அவையே தானே ஆய், இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே.

God, who is one with souls, Who is different from them, and Who is the Indweller and Prime Mover of all, gives to souls through His sakti, with which He stands in an inseparable relation, the results of good and bad deeds through which the soul experiences births and deaths.

3. உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்,
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

There is a soul which exists separate from the body and from the instruments of the body, for the following reasons: 1. There is something which is able to say 'No' (to the proposition that there is a soul). 2. There is something which is able to say 'My body'. 3. There is something which knows the five sensations. 4. There is something which knows dreams. 5. There is something which knows in the state of sleep when the body does not eat or work. 6. There is something which is able to know when taught.

4. அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே.

The soul is not one of the inner organs. As long as the soul is joined with anava mala alone, it cannot know anything; but as soon as it joints the inner organs it receives knowledge and experineces five stages The connection between the soul and inner organs is similar to that between a king and his ministers.

5. விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

Although the five organs of sense know the five sensations through the help of the soul, they do not know themselves or the soul which makes it possible for them to know. In a similar way, although the soul knows the world (phenomena) through the help of God, it neither knows itself nor God Who makes it possible for it to know. Souls are active in the presence of God as iron filings are active in the presence of a magnet (which means that there is no change in God).

6. உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்;
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

What ever is perceived as a definite object of sense is changeable. That which cannot be perceived does not exist. God is neither the one nor the other. Hence, He is called Siva-sat, which means that He can be known through grace-wisdom which He Himself imparts, but not through human intelligence.

7. யாவையுஞ் சூனியம் சத்(து) எதிர் ஆகலின்,
சத்தே அறியா(து); அசத்தில(து) அறியா(து);
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா.

In the presence of God, Who is unchangeable, nothing has a reality of its own. Hence, God cannot perceive the changeable, and the changeable cannot perceive the Unchangeable. That which perceives both is neither of them. The soul, therefore, which experiences both God Who is unchangeable, and the phenomenal world is changeable, is called 'changeable-unchangeable'.

8. ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

As a result of religious austerities performed in previous births and continued in the present, Siva Who has been guiding the soul through the kevala and sakala states at all times, now manifests Himself to the soul as a human guru and says, 'You are like one who is caught by a gang of hunters, namely, the five senses. You have even become like the hunters themselves'. Through this experience, the soul comes to know itself and God and realizes its advaita relationship with him.

9. ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி,
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

The soul which is unable to realize Siva through human understanding must realize Him through Divine Wisdom. When it so knows Him, the phenomenal world will appear as an illusion or a mirage. The soul then realizes the cooling shade of the presence of God. (In order that the soul may not revert to the world) it should concentrate on the five-lettered mantra (Namasivaya) – according to Law.

10. அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

The momement when the soul realizes that Siva has always stood in an advaita relation with itself and that Siva has been and is thereby the Prime-Mover of all, and when the soul accordingly makes its adjustment by surrundering itself to His will; anava, karma and maya will disappear (cease its activity).

11. காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

The soul realizes its inseparable union with Siva through ceaseless love, love which comes to the soul as soon as it knows that it Siva Who makes it possible for the soul to see in the same way as the soul makes it possible for the eye to.

12. செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேய(ம்) மலிந்தவர் வேடமு(ம்)
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

The soul should remove even the smell of the three malas which has been hindering it from uniting itself with the Lotus Feet of God, should associate with Siva-Jnanis in the temple, and should worship the Siva-linga and the form of the Siva-jnani even as he would Siva Himself

“ அன்பே சிவம் ”

GOD IS LOVE



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருமந்திரம் — திருமூலர்.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ்சோதரனே
தற்பரனே நின் தாள் சரண்.

அருட்பா — இராமலிங்க சுவாமிகள்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

தேவாரம் — திருஞானசம்பந்தர்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

விருத்தாசலப் புராணம்.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

கச்சியப்பசுவாமி — கந்தபுராணம்.

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
"கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம்" எனவினை கடிதேகும்
மத்தமும மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள் புயமதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே;
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயர் அதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமானே.

திருப்புகழ் — அருணகிரிநாதர்.

விநாயக ரகவல்

சீதக் களபச்
செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு
பல இசைபாடப்
பொன் அரைஞாணும்
பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில்
வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும்
பெரும் பாரக்கோடும்
வேழ முகமும்
விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும்
அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட
நீல மேனியும்
நான்ற வாயும்
நாலிரு புயமும்
மூன்று கண்ணும்
மும் மதச்சுவடும்
இரண்டு செவியும்
இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல்
திகழொளி மார்பும்
அற்புதம் நின்ற
கற்பகக் களிறே
முப்பழம் நுகரும்
மூடிக வாகன

இப்பொழு தென்னை
யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத்
தானெழுந் தருளி
மாயாப் பிறவி
மயக்க மறுத்தே
திருந்திய முதல்ஐந்
தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்
உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக்
குவலயந் தன்னில்
திருவடி வைத்துத்
திறம்இது பொருள்என
வாடா வகைதான்
மகிழ்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற்
கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம்
புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத்
தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை
அடக்கு முபாயம்
இன்புறு கருணையின்
இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங்
கருத்தினை யறிவித்
திருவினை தன்னை
அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந்
தந்தெனக் கருளி

மலமொரு மூன்றின்
மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில்
ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை
அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத்
தங்கிசை நிலையும்
பேறு நிறுத்திப்
பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின்
எழுத்தறி வித்துத்
கடையிற் சுழுமுனைக்
கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின்
முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின்
நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற்
கூடிய அசபை
விண்டெழு மந்திரம்
வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின்
மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங்
கருத்தறி வித்தே
அமுத நிலையும்
ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன்
குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின்
ஈரெட்டு நிலையுங்

உடற்சக் கரத்தின்
உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ்
சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக
இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம்
புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும்
தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால
வாயில் காட்டி
இருத்தி முத்தி
இனிதெனக் கருளி
என்னை அறிவித்
தெனக்கருள் செய்து
முன்னை வினையின்
முதலைக் களைந்தே
வாக்கும் மனமும்
இல்லா மனோலயம்
தேக்கியே என்றன்
சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டிற்
கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்
தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா
ஆனந் தமளித்

தல்லல் களைந்தே
அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே
சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே
சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய்
அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற
கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும்
விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர்
குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின்
அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின்
நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத்
தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக
விரைகழல் சரணே.

ஔவையார் அருளியது.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்

சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழ்ந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமய மாக்கியதே
எல்லை மருவாநெறியளிக்கும் வாதவூர் என்கோன்
திருவாசகம் எனும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ளின்ற வதனு
அவனருளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்
கண்ணுதலான்றன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
யெண்ணிறைந் தெல்லையிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்து
வெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
னுய்யவென் னுள்ளத்து ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தனியா யியமான னும்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பாய் யழிப்பாய் யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னுறத்தி னேறியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்

கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியோர்க்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாராவமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியோனே
நீரா யுருக்கியென் னுருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தைபெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியப் பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

—*—

திருவெம்பாவை
சக்தியை வியந்தது

மாணிக்கவாசக சுவாமிகளால்
திருவண்ணாமலையிலருளிச் செய்யப்பட்டது

திருச்சிற்றம்பலம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை
யாம் பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோரெம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குங்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யா மாரேலோரேம்பாவாய் 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றுள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியிற்பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோரேம்பாவாய் 3

ஒண்ணித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோரேம்பாவாய் 4

மால்அறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போல் அறிவோம் என்றுள்ள பொக்கங்களேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்

கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்
றோலம் மிடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோரெம்பாவாய் 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத்தலை அளித்தாட் கொண்டருளும்
வானவார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடேலோரெம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் காரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்றாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை உன்அரையன் இன்னமுதென் றெல்லேமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வல்நெஞ்சப் பேதையர் போல்வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோரெம்பாவாய் 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழ்இல் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியின் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோரெம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன்சீர் அடியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்கே பங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் ருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோரெம்பாவாய் 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபாற் றிருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன்
கோதில் குலத்தான்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலான்
ஏதவனைப் பாடும் பரிசேலோரெம்பாவாய் 10

பொய்யார் தடம் பொய்கைபுக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழி அடியோம் வாழ்ந்தோங்காண் ஆர்கழல்போற்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோரெம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீஆடுங்
கூத்தன் இவ் வானுங்குவலயமும் எல்லோமுங்
காத்துப் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோரெம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் புகப் பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச்சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூப்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய் 13

காதார் குழைஆடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழல்ஆட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோரெம்பாவாய் 14

ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாயோவாள் சித்தாங்களிகூர
நீர்ஒருகாலோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வார்உருவப் பூண்முலையீர் வாய்ஆர நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய் 15

முன் இக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிறவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழையேலோரெம்பாவாய் 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போற்
கண்ணாரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணாரொளி மழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க

எம்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன் றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயி றெமக்கேலோரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாதபுண்டரீகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம்இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரநற் சங்கவெண் குழையோற்காகிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும்நீ

துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளேநின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அணுகாவண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

திருவாவடுதுறை திருத்தாண்டகம் —
திருநாவுக்கரசு சுவாமிகள்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றும் தோன்றுங்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணிதோன்றுங்
காதில் வெண்குழைதோடு கலந்துதோன்று

மிடியேறுகளிற் றுரிவைப் போர்வைதோன்று
மெழிறிகழுந் திருமுடியு மிலங்கித்தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவனத்தெம் புனிதனார்க்கே.

திருப்பூவணம் — திருத்தாண்டகம்
திருநாவுக்கரசு சுவாமிகள்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றிஎன்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதிஎன்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே.

திருத்தாண்டகம் — திருநாவுக்கரசு சுவாமிகள்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லர் ஆகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

திருத்தாண்டகம் — திருநாவுக்கரசு சுவாமிகள்.

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென் மேல்வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

திருத்தாண்டகம் — திருநாவுக்கரசு சுவாமிகள்.

பித்தாபிறை சூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்—
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காலாயினி அல்லேனெனலாமே,

தேவாரம் — சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

தேவாரம் — சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கை

செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர என் கண்குளிர்ந் தனவே.

திருவிசைப்பா — சேந்தனார்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வ
னேடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

தேவாரம் — திருஞானசம்பந்த சுவாமிகள்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர் வாயுமைப்பங்கன் திரு ஆலவாயன் திருநீறே.

தேவாரம் — திருஞானசம்பந்த சுவாமிகள்.

வேயுறு தோளி பங்கன் விடம்உண்ட கண்டன
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

கோளறுபதிகம் —
திருஞானசம்பந்த சுவாமிகள்.

✓

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

— மாணிக்கவாசகர்.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து, புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

— மாணிக்கவாசகர்.

அம்பிகை பாமாலை

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச்சேயிழை
தஞ்சமென்(று) எண்ணித்தன் சேவடி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவியென் றாளே

திருமந்திரம்—திருமூலர்.

ஆத்தாளை எங்கள் அபிராமி
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்
குசமும் கரும்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.

அபிராமி அந்தாதி — அபிராமி பட்டர்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் உள்ளக்கமலத்தில்
இருப்பள் இங்கு வாராதுஇடர்.

சரசுவதி அந்தாதி — கம்பர்.

ஆறாத் துயர்கொண் டடியேன் சலிப்ப
அது செவியில்
ஏறாம லேயிருந் தால்என்செய்வேன்? எங்கள்
ஈசற்கொரு
கூறாகி, யண்ட முதலாய், இளமை
குலவுதவப்
பேறாகி வாழ்பவளே, குன்றைவாழும்
பெரியம்மையே.

பெரியநாயகியம்மை கலித்துறை — சிவப்பிரகாசர்.

ஓங்காரி என்பாள் அவள் ஒரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே.

திருமந்திரம் — திருமூலர்.

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்தூரப்
பரிபுரை நாரணி யாம்பல வண்ணத்தி
இருள்புரை. ஈசி, மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே.

திருமந்திரம் — திருமூலர்.

தேடியுனைச் சரணடைந்தேன்
தேசமுத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய்
கேட்ட வரந் தருவாய்,
பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாங் களைவாய்
கோடி நலம் செய்திடுவாய்
குறைகளெல்லாந் தீர்ப்பாய்.
எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி
ஒப்பி யுன தேவல் செய்வேன்
உனதருளால் வாழ்வேன்.
சக்தி யென்று நேர மெல்லாந்
தமிழ் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால்
பயமனைத்தும் தீரும்.
ஆதாரம் சக்தி யென்றே
அருமறைகள் கூறும்
யாதானும் தொழில்புரிவோம்
யாதுமவள் தொழிலாம்.
துன்பமே இயற்கை யெனும்
சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவு மவள் தருவாள்.

நம்பினோர் கெடுவதில்லை
　　நான்கு மறைத்தீர்ப்பு
அம்பிகைச் சரண்புகுந்தால்
　　அதிக வரம் பெறலாம்.

— பாரதியார் பாடல்.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
　　உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்கும்
　　பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்து என்னை எடுத்தாண்ட
　　அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்பும் இள நகைபோற்றி ஆரணநூ
　　புரம் சிலம்பும் அடிகள்போற்றி.

திருவிளையாடற்புராணம் — பரஞ்சோதி முனிவர்.

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
　　முடிபுனைந்து செங்கோல் ஓச்சி
முழுது உலகமும் சயம்கொண்டு, திறைகொண்டு
　　நந்திகண முனைப் போர் சாய்த்து
தொழு கணவற்கு அணிமண மாலிகைசூட்டி
　　தன்மகுடம் சூட்டி செல்வம்
தழைவுறு தன் அரசு அளித்த பெண் அரசி
　　அடிக் கமலம் தலைமேல் வைப்பாம்.

திருவிளையாடற்புராணம் — பரஞ்சோதி முனிவர்.

சொல்லும் பொருளும் என நடமாடும்
　　துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
　　யே, நின் புது மலர்த்தாள்

அல்லும் பகலும் தொழுமவர்க்
கே அழியா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே.

அபிராமி அந்தாதி — அபிராமி பட்டர்.

பரக்கெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரக்தமுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
வரக்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் — திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

— உமாபதி சிவாச்சாரியார்.

"பிள்ளை அழுங்குரலைப்
பெற்றவள் கேட்டால் சகியாள்
என் அளவும்" என்ற சொல்லும்
என்மட்டு ஏன் இல்லை அம்மா?
தள்ளிவிட்டால், வேறு எனக்குத் தாரகம்
இங்கு யாரும் உண்டோ?
கள் அவிழும் பூங்கோதைக்
காந்திமதி அம்பிகையே.

— காந்திமதி அம்பிகை மாலை.

வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனத்தில் வைத்த தாய்.

— காளமேகம் தனிப்பாடற்றிரட்டு.

மங்களமாம் அனைத்தினுக்கும் மங்களமே சிவமே
மக்கள் விழை நாற் பொருளும் வழங்கு நிலத்தாயே
எங்கள் புகலே, விழிமுன் தேய்ந்தவளே கௌரி
எழில் நாராயணி உன்னை இறைஞ்சிடுவோம் யாமே.

ஆக்குதற்கும் அளிப்பதற்கும் அழிப்பதற்கும் வல்ல
அகண்ட பெருஞ் சக்திவடிவான பழம் பொருளை,
சீர்க் குணங்கட் குறைவிடமே, திரிகுணங்கள் மயமே
திருநாராயணி, உன்னைத் தெண்டனிடு வோமே.

சரணடைந்தார் எதுமிலார் சார்துயரில் உழன்றார்
தமையருளி நனிபுரக்கும் தகை கெழுந்தும் அம்மே
தரணியுளார் யாவர்க்கும் சங்கடங்கள் தீர்க்கும்,
தனி நாராயணிதேவி, தாள்பணிவோம் யாமே.

சண்டிப் பாக்களின் மொழிபெயர்ப்பு.

வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்(கு);
அம்பியின் மீதுவைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்கு
கவுணியர்க்குப்
பால் கொடுத்தாய்; மதவேளுக்கு
மூவர் பயப்படச் செய்
வேல் கொடுத்தாய் அன்னையே
எனக்கு ஏதும் கொடுத்திலையே,

தனிப் பாடற்றிரட்டு — படிக்காசுத் தம்பிரான்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஸ்பமிசை வீற்றிருக்கும்

நாரணி மனுதீத நாயகி குணதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திருமடியவர் நாமமே
நானுச்ச ரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணிஎனப்புகழ
அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

— தாயுமானவர் பாடல்.

மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும்
நாடரிய பேரறிவாய்,
வேதர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாய் ஆகும்
எழில் பரையை வணங்குவாம்.

பதிபசுபாச விளக்கம் — சிவஞான வள்ளலார்.

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரொனும் திமிரமணுகாக்

கதி உண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளும் உண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன் றும் உண்டாகுமேல்
நதி உண்டகடலெனச் சமயத்தை உண்டபர
ஞான ஆனந்த ஒளியே.
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனும் அகந்தைதீர்த்தென்
மதி உண்டமதியான மதிவதன வல்லியே
மது சூதனன் தங்கையே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் ணுமையே.

உபநிஷத்து — தாயுமான சுவாமிகள்.

தனந்தரும் கல்வி தருமொரு
நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்
தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந்
தரு மன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி
ராமி கடைக்கண்களே.

அபிராமி அந்தாதி — அபிராமி பட்டர்.

ஓம் பராதேவி ஓம் பராசக்தி ஓம் சிவசதிக்
சக்தி பவானி ஓம் மகாதேவி
ஓம் சுத்த சச்சிதானந்த ரூபியே சரணம்
நாமென்னும் அகந்தையை நலத்தவர் உள்ளமே
நன்மலர் அரியணைகொண்டாய்
சேமமே யருளும்சித்தி நாயகியே
சிற்பரா சக்தி ஓம் சரணம்
வேண்டினேன் உன்தன் விமல பொற்பாதம்
வினையினேன் இடர்களைத் தீராய்
தீண்டிடா தென்னை சிறுமன அகந்தை
தீய காமாதிக ளென்றும்
அண்டி எனதுள்ளம்தன் அருட்
பெரும் சுடரைதுகளனுய் துன்னியம் சேயாய்
ஆண்டு கொள்சக்தி அன்னையே
உலகம் அனைத்தையும் படைத்த சிற்பரையே
அலைந்தலைந்து ஓடி அலுத்தனன்
உன்தன் அடிநிழல் எனக்கருள்வாய்
புலைமனமயக்கை பூண்டுடன் போக்கி
புந்தியுன் மந்திரமாக்கி
நிலையறு சித்தக்சுழலினை நிறுத்தி
நின் அன்பு நேயமே தருவாய்
இலையென்பதன்றி உன்தொண்டரின்
விருப்பை ஈந்திடும் இன்பமாம்சிவையே.

— சுத்தானந்த பாரதி.

உ

மீனாட்சி அம்மன் போற்றி அர்ச்சனை

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினைத் தீர்ப்பதே

ஓம் அங்கயற்கண்ணி அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அரசிளங் குமரியே போற்றி
ஓம் அப்பர் பிணி மருந்தே போற்றி
ஓம் அமுத நாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம் அருள் நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆனந்த வல்லியே போற்றி
ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
ஓம் இமயத் தரசியே போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈசுவரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி

ஓம் எண்திசையும் வென்ருய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயந்தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்ருேர்க்கினியோய் போற்றி
ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
ஓம் கலியாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணிக் குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணையூற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி
ஓம் கனகாம்பிகையே போற்றி
ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
ஓம் கற்பனைக் கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக் கினியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
ஓம் குற்றம்பொறுக்கும் குணமே போற்றி
ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சித்தந்தெளிவிப்பாய் போற்றி
ஓம் சிவயோக நாயகியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி

ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக்கரசியே போற்றி
ஓம் சேனைத் தலைவியே போற்றி
ஓம் சொக்கர் நாயகியே போற்றி
ஓம் சைவ நெறிநிலைக்கச் செய்தோய் போற்றி
ஓம் ஞானம்பிகையே போற்றி
ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
ஓம் தமிழ்க் குலச்சுடரே போற்றி
ஓம் தண்டமிழ்த் தாயே போற்றி
ஓம் திருவுடை யம்மையே போற்றி
ஓம் திசையெலாம் புரந்தாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி
ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி
ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் நற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி
ஓம் நீலாம்பிகையே போற்றி
ஓம் நீதிக்கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
ஓம் பழமறையின் குருந்தே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி

ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டிமா தேவியின் தேவே போற்றி
ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன் மயிலம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
ஓம் மலயத்துவசன் மகளே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மழலைக் கிளியே போற்றி
ஓம் மனோன்மணித்தாயே போற்றி
ஓம் மண் சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மீனவர்க்கோன் மகளே போற்றி
ஓம் மீனாட்சியம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
ஓம் யாழ்மொழி யம்மையே போற்றி
ஓம் வடி வழகம்மையே போற்றி
ஓம் வேலனுக்கு வேல்தந்தோய் போற்றி
ஓம் வேதநாயகியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
அம்மை அம்பிகையே போற்றி போற்றி
அங்கயற்கண்ணி அம்பிகையே போற்றி போற்றி
செய்யுமிவ அருச்சனை சேர்ந்த துதியை
அம்மையே ஏற்று அருள்க அருள்கவே
சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று
வாழ்க பல்லாண்டு வாழ்க அருள்கவே.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே.

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார்முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடையதண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்.

திருமுருகாற்றுப்படை — நக்கீரர்.

ஏது பிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

திருப்போரூர்ச்சந்நிதிமுறைத்திரட்டு —
சிதம்பர சுவாமிகள்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம்வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்சைவாழ்க
யானைதன் அணங்குவாழ்க
மாறிலா வள்ளி வாழ்க,
வாழ்க சீரடியா ரெல்லாம்.

கந்தபுராணம் — கச்சியப்ப சிவாசாரியார்.

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி, காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடிபோற்றி, அன்னான்
சேவலும் மயிலும் போற்றி,
திருக்கைவேல் போற்றி போற்றி.

கந்தபுராணம் — கச்சியப்ப சிவாசாரியார்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

கந்தர் அநுபூதி — அருணகிரிநாதர்.

ஆடும் பரிவேல் அணிசேவல், எனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்,
தேடும் கயமாமுகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.

கந்தர் அநுபூதி — அருணகிரிநாதர்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில
வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேல்படை வானவ
னேமறவேன் உனைநான்
ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு
ஒட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே.

கந்தர் அலங்காரம் — அருணகிரிநாதர்.

ஏறுமயி லேறிவிளை யாடும்முகம் ஒன்றே
  ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினைதீர்க்குமுகம் ஒன்றே
  குன்றுருவ வேல்வாங்கிநின்ற முகம்ஒன்றே
மாறுபடுசூரரை வதைத்த முகம் ஒன்றே
  வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
  ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே.

திருப்புகழ் — அருணகிரிநாதர்.

நாளென் செயும்வினை தானென்
  செயும்எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
  செய்யும்குும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
  தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
  னே வந்து தோன்றிடினே.

கந்தரலங்காரம் — அருணகிரிநாதர்.

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர்
  யாக்கைநில் லாது செல்வம்
பார்க்கு மிடந்தந்த மின்போலு
  மென்பர் பசித்து வந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங்
  கேனு மெழுந்திருப்பார்
வேற்கு மரற்கன் பிலாதவர்
  ஞானம் மிகவுநன்றே.

தந்தைக்கு முன்னந் தனிஞான
  வாளொன்று சாதித்தருள்

கந்த சுவாமி யெனைத்தேற்
றிய பின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யன்செய்ய
லாஞ்சத்தி வாளொன்றினுற்
சிந்தத் துணிப்பவன் தனிப்பருங்
கோபத்ரி சூலத்தையே.

கந்தரலங்காரம் — அருணகிரிநாதர்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ் சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேயந்த நான்முகனே.

கந்தர் அலங்காரம் ... அருணகிரிநாதர்.

கதிதனை ஒன்றையும் காண்கின்றி
லேன்கந்த வேல் முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன்
பாய்நரம் பாற் பொதிந்த ...

பொதிதனை யுங்கொண்டு திண்டாடு
மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென்
தன்மனம் வேகின்றதே.

கந்தரலங்காரம் — அருணகிரிநாதர்.

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம்
புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந்
தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க
ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்து என்னுள்ளங்
குளிரக் குதிகொண்டவே.

கந்தர் அலங்காரம் — அருணகிரிநாதர்.

சூலம் பிடித்தெம பாசஞ்
சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ்
சேன் கடன்மீதெழுந்த
ஆலங்குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையும் உண்டே
நமக்கொரு மெய்த்துணையே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுருகா வெனு
நாமங்கள் முன்பு செய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்
செங்கோடன் மயூரமுமே.

கந்தர் அலங்காரம் — அருணகிரிநாதர்.

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர - எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் - அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் - இரவாகப்
பத்தற்கிர தத்தைத் தடவிய
பச்சைப்புயல் மெச்சத் தருபொருள்
பட்சத்தொடு ரக்ஷித் தருள்வதும் - ஒருநாளே.

திருப்புகழ் — அருணகிரிநாதர்.

வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்
நுங்கட்கிங்கன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின்
வெறுநிழல்போல்
கையிற் பொருளுமுதவாது காணுங் கடைவழிக்கே.

ஓலையுந் தூதருங் கண்டுதிண்டாட லொழித்
தெனக்குக்
காலையும் மாலையு முன்னிற்கு மேகந்தவேள்
மருகுங்கிற்
சேலையுங் கட்டிய சீராவும் கையிற்சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பாதகையுந் தோகையும்
வாகையுமே.

திருமந்திரம் — திருமூலநாயனர்.

அருளா ரமுதே சரணஞ் சரணம்
அழகா அமலா சரணஞ் சரணம்
பொருளா எனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணஞ் சரணம்
மருவார்க் கரியாய் சரணஞ் சரணம்
மயில்வா கனனே சரணஞ் சரணம்
கருணாலயனே சரணஞ் சரணம்
கந்தா சரணம் சரணஞ் சரணம்.

முடியா முதலே சரணஞ் சரணம்
முருகா குமரா சரணஞ் சரணம்
வடிவேல் அரசே சரணஞ் சரணம்
மயிலூர் மணியே சரணஞ் சரணம்
அடியார்க் கெளியாய் சரணஞ் சரணம்
அரியாய் பெரியாய் சரணஞ் சரணம்
கடியாக் கதியே சரணஞ் சரணம்
கந்தா சரணம் சரணஞ் சரணம்.

திருவருட்பா — இராமலிங்கசுவாமிகள்

கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணஞ் சரணம்
சீலத் தவருக்கருள்வாய் சரணம்
சிவனுர் புதல்வா சரணஞ் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் ஒளியே சரணம்
காலற் றெறுவோய் சரணஞ் சரணம்
கந்தா சரணம் சரணஞ் சரணம்.

வேதப் பொருளே சரணஞ் சரணம்
விண்ணோர் பெருமான் சரணஞ் 'சரணம்
போதத் திறனே சரணஞ் சரணம்
புனைமா மயிலோய் சரணஞ் சரணம்
நாதத் தொலியே சரணஞ் சரணம்
நவைஇல் லவனே சரணஞ் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணஞ் சரணம்.

திருவருட்பா — இராமலிங்க சுவாமிகள்.

—ஸ்ரீ—

திருமால்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே, ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்; அரங்கமா நகருளானே.

குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம்நீட்டி
வடதிசை பின்புகாட்டித் தென்றிசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணை துயிலுமாகண்டு
உடலெனக்குருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே.

ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே.

ஆழ்வார் பாசுரம் —
தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்.

பட்டினத்தார் ஞானம்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையு நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையு பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே.

ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு,
உயர் செல்வ மெலாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார், நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடுநீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிரு; மனமே யுனக்கேயுப தேசமிதே.

அன்ன விசாரம், அதுவே விசாரம், அது வொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசாரம் நற் றேருகையரைப்
பன்ன விசாரம், பலகால் விசாரம், இப்பாவி நெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய், இறைவா கச்சி யேகம்பனே,

ஜோதி வழிபாடு

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்
வாம ஜோதி சோம ஜோதி
வான ஜோதி ஞான ஜோதி
மாக ஜோதி யோக ஜோதி
வாத ஜோதி நாத ஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி
ஏறு ஜோதி வீறு ஜோதி
ஏக ஜோதி ஏக ஜோதி
ஆதி நீதி வேதனே
ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே
வாழ்க வாழ்க நாதனே
ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்.

திருவருட்பா — இராமலிங்க சுவாமிகள்.

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நிர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பெரிய புராணம் — சேக்கிழார்.

வான்முகில் வழாது பெய்க
    மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
    குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
    நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
    விளங்குக உலக மெல்லாம்.

கந்தபுராணம் — கச்சியப்ப சிவாசாரியார்.

—❀—

Maha Mritunjaya Mantra

Om Tryambakam yajamahe
Sugandhim pushtivardhanam
Urvaarukamiva bandhanat
Mrityormuksheeya maamritat.

மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யாஜா மஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

Song of Eighteen 'Ities'

Serenity, regularity, absence of vanity,
Sincerity, simplicity, veracity,
Equanimity, fixity, non-irritability,
Adaptability, humility, tenacity,
Integrity, nobility, magnanimity,
Charity, generosity, purity,
Practise daily these eighteen 'ities'
You will soon attain immortality.
Brahman is the only real entity,
Mr. So and so is a false entity,
You will abide in eternity and infinity
You will behold unity in diversity,
You cannot attain this in the University
You can attain this in the Forest University.

— *Swami Sivananda*

Shanti Mantras

Om Sarvesham svastir bhavatu
Sarvesham shantir bhavatu
Sarvesham purnam bhavatu.
Sarvesham mangalam bhavatu

Sarve bhavantu sukhinah
Sarve santu niramayah
Sarve bhadrani pashyantu
Ma kaschit-duhkha-bhag-bhavet
Asato ma sat gamaya,
Tamasoma jyotir gamaya.
Mrityor ma amritam gamaya.

Om purnamadah purnamidam
Purnat purna mudachyate
Purnasya purna madaya
Purna mevaavasishyate.

Om Shanti! Shanti! Shanti!

சாந்தி மந்திரங்கள்

ஓம் ஸர்வேஷாம் ஸ்வஸ்திர் பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது.

ஸர்வே பவந்து ஸுகின
ஸர்வே ஸந்து நிராமயா!
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கஸ்சித் துக்க பாக்பவேத்.
அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய!
ம்ருதயோர்மா அம்ருதங்கமய

ஓம் பூர்ணமத; பூர்ண மிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவா அவசிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Shanti Mantras
(MEANING)

May auspiciousness be unto all;
May Peace be unto all,
May fullness be unto all;
May prosperity be unto all.

May all be happy;
May all be free from disabilities;
May all look to the good of others;
May none suffer from sorrows.

Lead me from the unreal to the Real;
Lead me from darkness to Light;
Lead me from death to Immortality.

Om! May we realise that the invisible Realty is whole,
And the seeming universe too is whole;
And though the projected universe is from that Reality,
The whole remains whole.

Om Peace: Peace: Peace:

சாந்தி மந்திரங்கள்
(பொருள்)

1. உலக மெல்லாம் உயர் நலம் பெருகுக!
அகில மெங்கும் அமைதி நிலவுக!
பாருலகெங்கும் பூரணம் பொலிக!
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

2. எல்லா வுயிர்களும் இன்புற வாழ்க!
எல்லாருக்கும் நல்லதே வளர்க!
எல்லா உயிர்களும் புனிதமாய்ப் பொலிக!
துன்பமே யின்றித் தொல்புவி வாழ்கவே!

3. எங்கள் வாழ்க்கை, இறைவ! நின்னருளால்
அசத்தி னின்று சத்திற்குயர்க
சாவினின்று அமரத் தன்மைக்குயர்கவே!

4. அதுவும் பூரணம் இதுவும் பூரணம்
பூரணத்திற் போந்தது பூரணம்
பூரணத்திற் பூரணம் எடுத்தும்
நிற்பது பூரண நிறைவாம் ஒன்றே!
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

O Great Lord! I have no other source of refuge than you. You are my sole asylum. Therefore, protect (me) always.

உன்னையன்றி சரண் இல்லை
உனக்கே சரணம் என் ஐயனே
ஆகையால் கருணை கூர்ந்து
காப்பாற்றும் மகேஸ்வரா.

— Swami Sivananda.

Life Divine

Hare Rama Hare Rama Rama Rama Hare Hare
Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare

Serve, Love, Give, Purify, Meditate, Realise,
Be Good, Do Good, Be Kind, Be Compassionate

Practise Ahimsa, Satyam, Brahmacharya,
This is the foundation of Yoga & Vedanta.

Practise Non-injury, Truth and Chastity
This is the essence of Religion & Spirituality.

Practise Universal Love, Truth and Purity,
This is the essence of Religion & Spirituality.

Enquire 'Who am I?, Know the self and be free,
Enquire 'Who am I?' Know the self and be free.

You are not this body, You are not this changing mind,
You are the essence of Immortal Divinity

You are not this body, You are not this changing mind,
You are the essence of Eternal Atma.

Hare Rama Hare Rama Rama Rama Hare Hare
Hare Rama Hare Rama Rama Rama Hare Hare

Upadesamritam

Serve, love, give, purify, meditate, realise
Be good, do good, be kind, be compassionate.
Be bold, be pure, be wise, virtuous,
Be honest, be sincere, be truthful.
Be patient, be tolerant, be obedient,
Be simple, be humble, be noble. be gentle,
Adapt, Adjust accommodate,
Bear insult. bear injury, highest Sadhana.
Enquire 'Who am I', know thy Self, and be free.
Be still, be quiet, know thy Self.
Find the Hearer, find the Seer, find the Knower.
You are not this body, not this mind;
Immortal Self you are.

— *Sri Swami Sivananda.*

Cheer up your spirit. Have perfect trust in God. Keep the mind fully occupied. Practise daily meditation. Develop virtuous qualities. Sing the name of the Lord. Thirst for his vision. The Divine Grace will descend upon you.

— *Swami Sivananda.*



தோற்றம் துடிஅதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமிகும்
ஊன்று மலர்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு.

— உண்மை விளக்கம்.